Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆனி 19    [03-07-93]    சனிக்கிழமை    ஓசை 135

## அரச ஊழியரின் அதிகரித்தசம்பளம் அடுத்த ஆண்டு முதலே கிடைக்கும்

பாதுகாப்புச் செலவினம், வரவு செலவு திட்டத்தில் துண்டும் விழும் தொகை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணத்தால் அரச சேவையில் சில தரங்களில் உள்ள ஊழியர்களுக்கு இவ்வாண்டு ஜூலை மாதத்திலிருந்து வழங்கப்படவிருந்த 40 சதவீத சம்பள அதிகரிப்பு கொடுப்பனவை அரசு ஒத்திவைத்துள்ளது. இக் கொடுப்பனவு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை பின்போடப்பட்டுள்ளது. இவ்வாறு செலுத்தப்படாதிருக்கும் கொடுப்பனவு அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நிலுவையாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 40 சதவீத சம்பள அதிகரிப்பு இவ்வாண்டு ஜனவரியிலிருந்தே வழங்கப்பட முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அரசு தற்போது எடுத்துள்ள தீர்மானத்தின்படி மாதாந்தம் 3000 ரூபாவிற்கு குறைவாக சம்பளம் பெறுவோருக்கான இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்பு அடுத்த (4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் கரையோர காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் 30-ம் திகதி புதன்கிழமைஇரவு 10.15 மணியளவில் பொன்னாலை, மூளாய்ப் பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (41)

# ‘றுகுணு’ கப்பலில் கடற் கொள்ளை: அரசாங்கப் பத்திரிகையின் புரளி!

(கொழும்பு)

போர்க்கைதிகள் விடுதலை தொடர்பாக ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து தடைநீக்கம் செய்யப்பட்ட பொருள்களை வடக்குக்கு ஏற்றிவந்த எம். வி. றுகுணு கப்பல் கடலில் வைத்து விடுதலைப்புலிகளால் கொள்ளையிடப்பட்டதாக சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிக்கரை பத்திரிகையான ‘டெய்லி நியூஸ்’ புரளி ஒன்றை முன்பக்கச் செய்தியாக வெளியிட்டுள்ளது.

‘டெய்லி நியூஸ்’ வெளியிட்ட இப்புரளிச் செய்தியில் மேலும், புலிகளின் இந்தத் துணிகரமான செயல் சம்பந்தமான தகவல் கொழும்பை எட்டியதும் பாதுகாப்பு அமைச்சின் தொலைத் தொடர்புச் சாதனங்கள் சுறுசுறுப்புடன் இயங்கியதாகவும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு மாற்றாக அனுப்பப்பட்ட பொருள்கள் முழுவதையும் அல்லது அதில் ஒரு பகுதியை றுகுணுக் கப்பலிலிருந்து புலிகள் கடற்கொள்ளை அடித்திருப்பதாக பெயலரை வெளியிட விரும்பாத தாப்புகளை மேற்கோள் காட்டி இப்புரளியை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

காங்கேசன்துறையில் நங்கூரமிட்டிருந்த இந்தச் சரக்குக் கப்பலுக்குப் பொய்யான றேடியோத் தகவல் ஒன்றைக் கொடுத்து, ஏமாற்றி வெளியில் எடுத்து, புலிகளின் ஆயுத பாணிகளான விசைப்படகுகள் (03ஆம் பக்கம் பார்க்க)



யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று 'கரும்புலிகள்' இசை நாடாவை தமிழீழ விடுதலைப் புலிகள் துணை ராணுவத் தளபதி திரு. பால்ராஜ் வெளியிட்டு வைப்பதையும், அதனை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் பெற்றுக்கொள்வதையும், அருகே தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களையும் படத்தில் காணலாம்

## ‘றுகுணு’ கப்பல் அடுத்து எங்கே?

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட பொருள்களை ஏற்றிய நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்தில் ரித்து நிற்கும் ‘றுகுணு’ கப்பல் தொடர்பாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவினர் ஆலோசனை நடாத்திவருகின்றனர்.

நேற்றுக்காலை கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இவ் ஆலோசனைக் கூட்டத்தில்

களை காங்கேசன்துறையில் இறக்கி களஞ்சியப்படுத்திக் கொள்வதா? அல்லதுபொருள் (03 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிபாதை விவகாரம் ஜெனிவாவிற்கு அறிக்கை

(நமது நிருபர்)

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை திறப்ப தொடர்பாக அப் பகுதிகளைப் பார்வையிட்ட அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் நாளை மறுதினம் இதுபற்றிய பூரண அறிக்கை ஒன்றை ஜெனிவாவில் உள்ள தமது தலைமையகத்திற்கு அனுப்பிவைப்பர் என மேற்படி உயர்ஸ்தானிகராலய யாழ் வதிவிடப்பிரதிநிதி திரு. அசோக்குமார் தெரிவித்தார்.

மேற்படி பாதை திறப்பு தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஆலோசனை நடாத்துவதற்கும் பாதையை நேரில் சென்று பார்வையிடவும் கடந்த செவ்வாய்க்கிழமை அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய கொழும்பு பிரதிநிதிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்தது தெரிந்ததே. இவர்கள் இப்பாதை தொடர்பாக அரசுடன் தாம் இணை (03ஆம் பக்கம் பார்க்க)

## இசை அமைப்பாளருக்கு தலைவரின் தங்கவிருது

## விடுதலைப் புலிகள் விவகாரம்

## இந்தியாவின் சிக்கலான தேசிய பிரச்சினையாம்



யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று 'கரும்புலிகள்' இசை நாடாவை தமிழீழ விடுதலைப் புலிகள் துணை ராணுவத் தளபதி திரு. பால்ராஜ் வெளியிட்டு வைப்பதையும், அதனை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் பெற்றுக்கொள்வதையும், அருகே தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களையும் படத்தில் காணலாம்.

# இசை அமைப்பாளருக்கு தலைவரின் தங்கவிருது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நேற்று இடம்பெற்ற கரும்புலிகள் ஒலிப்பதிவு இசை நாடா வெளியீட்டு விழாவில் இசை அமைப்பாளர் திரு. கண்ணன் அவர்கட்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் தங்க விருது பரிசாக வழங்கப்பட்டது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ் விருதை விழா மேடையில் வைத்து வழங்கினார். கரும்புலிகள் ஒலிப்பதிவு நாடாவின் இசை அமைப்பாளர் திரு. கண்ணன் என்பது குறிப்பிடத்தக்கது. கலை பண்பாட்டுக் கழகத்தால் உருவாக்கப்பட்ட மேலும் பல இசை நாடாக்களுக்கு இசை அமைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முதற் கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் துணை இராணுவத் தளபதி திரு. பால்ராஜ் அவர்கள் இசைப்பாடல்

(03 ஆம் பக்கம் பார்க்க)

# 'கரும்புலிகள்' பாடல்களுக்கு அறிஞர்கள் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

இந்த இசை நாடாவின் நாயகர்கள் எங்கள் கரும்புலிகள். இவர்கள் எங்கள் நண்பர்கள். எங்களுடன் வாழ்ந்தவர்கள்.

இந்த ஒலி நாடாவில் தீகுளித்தவர்களின் பாடல்களைக் கேட்டு இந்த தேசம் தீக்குளிக்கவேண்டும்.

இவ்வாறு திரு. யோகரட்ணம் யோகி அவர்கள், நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெற்ற கரும்புலிகள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

புதிய காலத்தை, புதிய திருப்பத்தை, புதிய வரலாற்றை இப்போராளிகள் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்த மண்ணிற்காக தற்கொடை செய்து கொண்டவர்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்

இசை வாரிதி திரு. வீரமணி ஐயர் மதிப்புரையாற்றும் போது ஈரேழு பதினான்கு

(03 ஆம் பக்கம் பார்க்க)

கரும்புலிகள் சிறப்பிதழாக

## விடுதலைப் புலிகள் ஏடு நாளை வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் குரல் 40வது வெளியீடு நாளை வெளிவருகின்றது.

கரும் புலிகள் சிறப்பிதழாக இவ் விதழ் அமைந்துள்ளது. இவ் இதழுடன் கரும்புலிகள் நினைவாக வர்ணப்படம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

''தமிழர் பிரச்சினை: கடும் போக்கு தொடர்கின்றது'' என்ற தலைப்புச் செய்தியைக் கொண்டுள்ள இவ்விதழின் 'புலிகளின்குரல்' பகுதியில் 'யூலை 5 கரும்புலிகள் நாள்' விளக்கவுரை இடம்பெற்றுள்ளது. மேலும், ''மதகுருமாரின் சமாதான முயற்சிகளும், அரசாங்கத்தின் அக்கறையீனமும்'', ''போர்க் கைதிகளின் விடுதலையும், பொருளாதாரத் தடை நீக்கமும்'' என்ற தலைப்புகளிலான கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றோடு கரும்புலிகள் சிறப்பிதழ் அமைந்துள்ளது.

# 'றுகுணு' கப்பல் அடுத்து எங்கே?

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட பொருள்களை ஏற்றிய நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்தில் ரித்து நிற்கும் 'றுகுணு' கப்பல் தொடர்பாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவினர் ஆலோசனை நடாத்திவருகின்றனர்.

நேற்றுக்காலை கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இவ் ஆலோசனைக்கூட்டத்தில் அத்தியாவசிய சேவைகள் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும், கூட்டுப்படைத் தலைமை அலுவலக அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் இவ்ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் தெரியவருகிறது.

'றுகுணு'' கப்பலை மீண்டும் கொழும்புக்கு திருப்பி அழைத்துக்கொள்வதா? அல்லது கப்பலில் உள்ள பொருள்களை காங்கேசன்துறையில் இறக்கி களஞ்சியப்படுத்திக் கொள்வதா? அல்லது பொருள்

(03 ஆம் பக்கம் பார்க்க)

வையிட்ட அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் நாளை மறுதினம் இதுபற்றிய பூரண அறிக்கை ஒன்றை ஜெனிவாவில் உள்ள தமது தலைமையகத்திற்கு அனுப்பிவைப்பர் என மேற்படி உயர்ஸ்தானிகராலய யாழ் வதிவிடப்பிரதிநிதி திரு. அசோக்குமார் துவதற்கும் பாதையை நேரில் சென்று பார்வையிடவும் கடந்த செவ்வாய்க்கிழமை அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய கொழும்பு பிரதிநிதிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்தது தெரிந்ததே. இவர்கள் இப்பாதை தொடர்பாக அரசுடன் தாம் இணை

(03ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் விவகாரம்

# இந்தியாவின் சிக்கலான தேசிய பிரச்சினையாம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் பிரச்சினைமிகவும் சிக்கலான தேசிய பிரச்சினை என்றும், இவர்களின் நடவடிக்கையை முறியடிக்க மத்திய மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் உள்நாட்டு பாதுகாப்புஅமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்தார். நேற்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் ஒன்றரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்திய பின் செய்தியாளர்கள் இடையே அவர் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு வசதியாக மேலும் 500 ஏ. கே - 47 ரகத் துப்பாக்கிகளை மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கும். மத்திய உளவுத்துறைக்கும் மாநில உளவு மற்றும் பொலிஸ்படைக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்புஇருக்க வேண்டும் என்றும் அமைச்சர் ராஜேஷ் பைலட் குறிப்பிட்டார்.

சிறையிலிருந்து விடுதலைப் புலிகள் தப்பிச்செல்வது குறித்துத் தாம் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கவலை தெரிவித்ததாகவும், அதற்கு ஜெயலலிதா பதிலளிக்கையில் அது பின்னணியற்ற தனிச்சம்பவம் என்று பதிலளித்ததாகவும் மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

தமிழக பொலிசை நவீனப்படுத்த மத்திய அரசிடம் ஜெயலலிதா நிதியுதவி கோரியது குறித்தும் கடலோரக் காவலில் மத்திய அரசு உதவ வேண்டும் என அவர் கோரியது குறித்தும் தாம் மத்திய அரசுடன் ஆலோசிக்கவுள்ளதாகவும் அமைச்சர் பைலட் மேலும் தெரிவித்தார்.

தமிழகத்தில் தற்போதுள்ள சுமார்தொண்ணூறாயிரம்இலங்கை அகதிகள் அனைவரையும் விரைவில் திருப்பியனுப்ப வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கை குறித்து மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆளும் கட்சியினர் ஆதரவு கிட்டுப?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் யுத்தக்கைதிகளாக தடுத்து வைக்கப்படடிருப்போர் குறித்து விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருக்கும் பிரேரணை தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சி உறுப்பினர்களிடையேயும் ஆதரவு திரட்டிவருவதாக நேற்று கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை திரட்டுவதிலும் எதிர்க்கட்சிகள் தீவிர கவனம் செலுத்திவருவதாகவும், குறிப்பாக ஐ. தே. க

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வருட இறுதிக்குள் பிரச்சினைக்குத் தீர்வு

- ரணில்

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற உள்ளூர், வெளியூர் பொருளாதார நிபுணர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். எனினும் இனப்பிரச்சினை எவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்படும் என அவர்விளக்க வில்லை.

## முன்னாள் றோ தலைவருடன் உள்துறை அமைச்சர் பேச்சு

(சென்னை)

இந்திய உள்துறை பாதுகாப்பு அமைச்சர் ராஜேஷ் பைலட் முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் பேச்சு நடத்திவிட்டு தற்போது சென்னையில் தங்கியுள்ள றோ அமைப்பின் முன்னாள் தலைவர் நாராயணனையும் அவரின் இல்லத்திற்கு சென்று சந்தித்துப் பேசியதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் ராஜேஷ் பைலட் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டியையும சந்தித்துப் பேசினார்.

முன்னதாக அமைச்சர் சென்னை வந்து சேர்ந்த போது தமிழக காங்கிரஸ் தலைவர்கள் அவரை விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

## பாணின் கட்டுப்பாட்டுவிலை அதிகரிக்க தீர்மானம்

பாணின் கட்டுப்பாட்டு விலை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் எட்டு ரூபாவாக இருக்க வேண்டுமென்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

''அரசாங்கத்தினால் மாவின் விலை கிலோ 1-35 சதத்தாலும், பாணின் விலை ரூ. 1/- ஆலும் உயர்த்தப்பட்டுள்ளது. இருந்தும் எமது சங்க அங்கத்தவர்களுக்கு. கச்சேரியினால் மூலப்பொருள்களான மா, சீனி மற்றும் துணைப் பொருள்களான ஈஸ்ற், ஹைகோ, மாயா போன்றவைகளை கச்சேரியினூடாக கப்பல் மூலம் பெறுவதனாலும், மற்றும் இன்று மக்களின் முக்கிய உணவாக பாண் இருப்பதனாலும் எமது சங்கம் பாணின் விலையை 50 சதத்தால் கூட்டியுள்ளது'' என இது குறித்து பேக்கரி உரிமையாளர் சங்கம் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு விடுதிகளில் 17 இளைஞர் கைது

[கொழும்பு]

கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள பல விடுதிகளில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது கடந்த செவ்வாயன்று 17 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் வடக்கு கிழக்குப் பகுதியிலிருந்து கொழும்பு வந்தவர்கள்.

கொட்டாஞ்சேனை சுமத்திராம மாவத்தை, சென் பெனடிக்ஸ் மாவத்தை சிறிகுணானந்த மாவத்தை வால்ஸ் வீதி, மேபீல்ட் வீதி ஆகிய இடங்களிலுள்ள விடுதிகளிலிருந்து கைதான இவர்கள் தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றனர்

## வரி விளம்பரம்

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6937)

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஆலங்கட்டை றோட் கொள்ளாவத்தை பொலிகண்டி கற்கண்டுமாமா சைக்கிள்கடை, பொலிகண்டி. (5220)

### உணவுப் பார்சல்கள்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாராவின் உணவுப்பார்சல்கள் முற்பகல் 11.30 மணி முதல் 3.00மணி வரை பெற்றுக் கொள்ளலாம். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை சுண்டுக்குளி. செந்தாமரை 7 குமாரசாமி வீதி. பல்கலைக் கழக முன்வீதி. கந்தர்மடம் ஆகியஇடங்களிலும்பெற்றுக் கொள்ளலாம். (சி-6898

### கோழிகள், குஞ்சுகள்

முட்டையிடும் ஊர்க்கோழிகள், நடுத்தரக் குஞ்சுகள், 15 நாள் வயது—லோமன் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் கோல்டன்கொமற் சேவல் குஞ்சுகள் சுத்த இன வெள்ளடியன் கோழிகள் விற்பனைக்கு உண்டு யாழ் வீதி. உரும்பராய் சந்தி (அன்னை பூபதி கலையரங்கம் அருகில்) (5259)

### றெனி மூக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்துக் கண்ணாடி வழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, (யாழ். தனியார் வைத்தியசாலைக்குமுன் பாக) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (5242)

### மாட்டு வண்டி சவாரி

அளவெட்டி விநாயகர்விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி நாளை பி. ப. 2-00மணிக்கு சுன்னாகம் கந்தரோடை சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் A. B C. என மூன்று பிரிவுகளாக நடைபெறும.

### பாரதிதாசன் கல்வி நிலையம்

தமிழ்
G. A. Q.
பேராதனை
1989-ஆவணி
மீட்டல் வினாவிடை வகுப்பு
ஆரம்பம்
**3-7-1993**
திரு. சி. கணேசலிங்கம்
B. A. (Hons)
(சி-6924)

### ஒப்படைக்க கோரிக்கை

யாழ் கல்வித் திணைக்களத்தினால் கடந்த திங்கட்கிழமை முதல் வடமராட்சிக்கும், தெற்பெலிக்கும், நாவற்குழிக்கும் பொது இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் பாதிப்புற்றவர்கள் மேல்முறையீட்டினை 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக யாழ். கலவித்திணைக்களத்திற்கு ஒப்படைக்கும்படியும், மேல் முறையீட்டுச்சபை பாதிக்கப்பட்டவர்களின்முறையீட்டினைப் பரிசீலனை செய்யவுள்ளதாக கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-03

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்டதுப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**குஞ்சு** (ம.அருள்தாசன்-மட்டு)

அம்பாறை. திருக்கோயில்-தாண்டியடிப்பகுதியில் சிறிலங்கப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது வீரச்சாவெய்திய,

**லக்கி** (-கருவேப்பங்கேணி-மட்டு)

அம்பாறை-தாண்டியடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**எஸ் பி** (— — —)

**சலீம்** (— — —)

**சின்னத்தம்பி** (— — —)

மட்டுநகரில் கோயில் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர்மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச சூட்டில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள். படுவான்கரை - பாவற்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு-காளைபோட்டமடுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சங்கிலி/சஞ்சீவி** (காசுபதி வடிவேல்-ஆரையம்பதி 03-மட்டு)

மட்டு-ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**நொபேட்** (நல்லையா சிறிபாலன்-ஆரையம்பதி-மட்டு)

கிளிநொச்சி-வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**2 ம் லெப். ரவியம்மான்** (சுயம்பு தெய்வேந்திரம்-ஓமந்தை)

முல்லைத்தீவு-விசுவமடுப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய.

**2-ம் லெப் மரியா** [புவனேந்திரசோதி புலேந்திரன்-சித்-தன்கேணி, வட்டுக்கோட்டை, யாழ்]

மணலாறு- அலம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில்வீரச்சாவெய்திய,

**ராதை** [விக்கினேஸ்வரி கணேசு-இராசவீதி, கரந்தன்சந்தி, நீர்வேலி-யாழ்]

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண், குழந்தை ஆகிய இரு தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு - புளியங்குளத்தில் இந்தியப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**விஜி** (க. சந்திரகாந்தன் - கொக்குத்தொடுவாய்-மணலாறு)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

கிளிநொச்சிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு திருமலை - சூரன்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய-

**மேஜர் பவான்** (சாந்தலிங்கம் நாகேந்திரராசா - 3-ம் கொலனி, கிளிவெட்டி, மூதூர் -திருமலை)

**வெற்றி** ( — தியாகராசா - கன்னியா - திருமலை)

**ரஜனி** (நடேசலிங்கம் சங்கர் - தம்பலகமம் - திருமலை)

**பலவன்** (நடராசா யோகராசா - நொச்சிகுளம்-திருமலை)

**லெப். கபாலி** (தாவீதுப்பிள்ளை நாகராசா - 3-ம்வட்டாரம், சங்கித்தம்வாடி, பேசாலை-மன்னார்)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 10 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 05 தமிழர்கள். கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன், பெண் உட்பட 03 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு பூநகரி - மான்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப். திருவருள்** (தம்பையா கைலநாதன் - வேராவில் - பூநகரி)

**2-ம் லெப். கதிர்ச்செல்வன்** (திமோர்தேயு யேசுதாசன் - வலைப்பாடு - பூநகரி)

**கப்டன் சிவகாந்** [சுப்பிரமணியம் நித்தியானந்தன் -உடுத்துறை வடக்கு, தாளையடி)

**2-ம் லெப். வில்வம்/மறவன்** (ஜெயபால் பெர்னாண்டோ பீலிகஸ்றெனால்ட் வெற்றிலைக்கேணி- யாழ்)

மட்டு - முஸ்லிம் குடியிருப்பில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்டு தாக்கிய போது வீரச்சாவெய்திய-

**றொசான் யுகதீபன்** (நாகையா பாரவிச்சந்திரன்- பாலையடிமடு, முகத்துவாரம்-மட்டு)

திருமலை - பன்குளம் வீதியில் சிறிலங்கா விமானப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப் நீலவாணன்/மோகன்தாஸ்** (பாலசுந்தரம் பாலச்சந்திரன் - சாம்பல் தீவு - திருமலை)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் மருதவாணன்/உமேஷ்** (கந்தசாமி மணிமாறன்- 299, திருஞானசம்பந்தர் வீதி, திருமலை)

**லெப். ரமணன்** (காளிமுத்து முருகானந்தன் - பிள்ளையார்பிட்டி, அடம்பன் - மன்னார்)

**அறிவழகு** (சுப்பிரமணியம் செந்தில்நாதன் - நாவற்குளம், ஓமந்தை வவுனியா)


**லெப் ராஜேஷ்** [கந்தையா சிறிசுதாகர் - ஆழியவளை - தாளையடி)

**2-ம் லெப் கரன்** [செல்வராஜா மருமகுமார்- மகேஸ்வரி வாசிகசாலை, நீர்வேலி தெற்கு, யாழ்]

**கலைக்கொடி** [அம்பிகாதேவி நடராஜா கோவில் தோட்டம்-அல்வாய் பருத்தித்துறை யாழ்]

# 1-ம் ஆண்டின் முத்தான நினைவலைகள்





# வீரவேங்கை கஸ்ரோ / இயல்வாணன்

## ( சோமசுந்தரம் கமலநாதன் )

வாரிவளவு காரைநகர்

( கட்டைக்காட்டில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்தார் )

மண்ணில் : 28 - 12 - 1974

மண்ணிற்காக : 03 - 07 - 1992

ஈழமகள் விடுதலைக்காய்
இரத்தமழை பெய்தவனே
இளம்வயதில் தியாகத்தின்
இலக்கணமாய் போனவனே

வாழத்தான் தமிழீங்கு
வரலாறாய் ஆனவனே
காலத்தால் அழியாத
காவியமநீ எம் "கஸ்ரோ"

பெற்றவரும் திவகமும்
பெருமையொடு தலைநிமிர
மற்றவரும் நின்வழியில்
மார்தட்டி களம்போந்தார்

நற்றவத்தின் விளைவாக
நம்மீன்ற இயல்வாணா
வெற்றிபெறும் நாளொன்றும்
வெகுதொலைவில் இல்லையடா!

**இன்று எமது இல்லத்தில் வழங்கவிருக்கும் இரவுப்போசனத்தில் சக போராளிகளைக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

40, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(சி 6946)

சாவெய்திய-

**றொசான் யுகதீபன்** (நாகையா பாரவிச்சந்திரன்- பாலையடிமடு, முசுத்துவாரம்-மட்டு)

திருமலை - பன்குளம் வீதியில் சிறிலங்கா விமானப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப் நீலவாணன்/மோகன்தாஸ்** (பாலசுந்தரம் பாலச்சந்திரன் - சாம்பல் தீவு - திருமலை)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் மருதவாணன்/உமேஷ்** (கந்தசாமி மணிமாறன்- 299, திருஞானசம்பந்தர் வீதி, திருமலை)

**லெப். ரமணன்** (காளிமுத்து முருகானந்தன் - பிள்ளையார்பட்டி, அடம்பன் - மன்னார்)

**அறிவழகு** (சுப்பிரமணியம் செந்தில்நாதன் - நாவற்குளம், ஓமந்தை வவுனியா)

**லெப் ராஜேஷ்** [கந்தையா சிறிசுதாகர் - ஆழியவளை - தாளையடி)

**2-ம் லெப் கரன்** [செல்வராஜா மருமகுமார்- மகேஸ்வரி வாசிகசாலை, நீர்வேலி தெற்கு, யாழ்]

**கலைக்கொடி** [அம்பிகாதேவி நடராஜா கோவில் தோட்டம்-அல்வாய் பருத்தித்துறை யாழ்]

**செந்தில்** [சின்னத்துரை சிறிபத்மராசா ஊரெழு கிழக்கு சுன்னாகம்]

**இயல்வாணன்/கஸ்ரோ** [சோமசுந்தரம் கமலநாதன்- வாரிவளவு காரைநகர் யாழ்]

முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானகுண்டுவீச்சின்போது பலியான இடம்பெயர்ந்த மணலாறு குமுளமுனையைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6942)

## 1-ம் ஆண்டு நினைவுகளில்...

பிறப்பு: 30 - 08 - 1973



வீரச்சாவு: 08 - 07 - 1992

## லெப்.ரமணன்

(காளிமுத்து முருகானந்தன்)

தமிழ்த்தாயின் பாலுண்டு வளர்ந்தாய்
தமிழீழ மண்ணில் தவழ்ந்தாய்
தலைவனின் வழியினில் நடந்தாய்
களம் பல கண்டாய் எதிரியைவென்றாய்
ரமணா! நீ மறைந்து விட வில்லை
வாழ்கின்றாய் மாவீரனாய்.

அடம்பன்,
மன்னார். (5263)

-குடும்பத்தினர்.

## சிந்தனைக்கு

உறுதியுடன் நம்பவேண்டுமென்றால், முதலில் நாம் ஐயப்பாட்டுடன்தான் தொடங்கவேண்டும்.

ஸ்டானிஸ்லாஸ் (போலந்து மன்னன்)


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## தன் பங்கை அரசு செய்யட்டும்

**போர்**க்கைதிகள் தொடர்பான உடன்பாடு குழப்பமடைந்துவிட்டது. சிறிலங்கா அரசாங்கம் புலிகளுடன் செய்துகொண்ட உடன்பாட்டை நிறைவேற்றத் தவறிவிட்டது. இதன்காரணமாகப் போர்க்கைதிகளின் விடுதலையும் தாமதப்பட்டுள்ளது.

இந்த உடன்பாடு நிறைவேற்றப்பட்டு, வட பகுதிக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் சீர்பட்டிருக்குமானால், சமாதானம்ஏற்படக்கூடிய ஒரு நல்லெண்ணச் சூழலும், அதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் ஓர் அரசியல் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பும் உருவாகியிருக்கக்கூடும். விடுதலைப் புலிகள் இயக்கமும் இக்கைதிகள் விடுதலை தொடர்பான உடன்பாட்டை ஒரு நல்லெண்ணச் சூழலை உருவாக்கும் ஒரு முயற்சியாகவே கருதியதை உணரக்கூடியதாக இருந்தது.

விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வொன்று காணப்படவேண்டுமானால், அதற்கான நல்லெண்ண, சமாதான சூழ்நிலை ஒன்று உருவாகவேண்டும் எனத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளனர். கடந்த காலத்தில் அதற்கான முயற்சியில் ஈடுபட்டும் உள்ளனர். இதன் ஒரு கட்டமாகவே அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்தபோது யுத்தக் கைதிகளான இருபொலிசாரை விடுதலைசெய்தனர்

அதன் பிற்பாடு, போர்க்கைதிகளின் உண்ணாவிரதம் முடிவுற்றதும், சிறிலங்கா அரசாங்கம் தடை நீக்கப்பட்ட பொருள்களின் ஒரு சிறுதொகுதியைத் தானும் அனுப்பிவைக்கமுன்னரே ஐந்து பொலிசாரை விடுதலை செய்தனர். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அதனை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகக் கொண்டு, சமாதான சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான முயற்சியை எடுக்கவில்லை. மாறாக, நல்லெண்ணச் சூழ்நிலை ஒன்று உருவாவதற்கான உடன்பாட்டையே நிறைவேற்றாமல் கைவிட்டுவிட்டது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இப் பின்னடிப்பின் பின்னரும், நோயுற்றிருந்த போர்க்கைதி

## ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டிற்கு நல்லதல்ல

### அரசியல் யாப்பு ராஜாங்க அமைச்சர்

[கொழும்பு]
அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையும் ஒருவரிடமே முழு அதிகாரமும் குவிந்துள்ள நிலையும் நாட்டிற்கு உகந்ததல்ல என புதிதாக நியமனமான அரசியல் யாப்பு மற்றும் அரசியல் விவகார இராஜாங்க அமைச்சர் ஹரிந்திரநாத் நுனுவில தெரிவித்துள்ளார்.

புதிதாக பதவி ஏற்ற அமைச்சர் மல்வத்தைபீட, அஸ்கிரியபீட மகாநாயக்கர்களை சந்தித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு பௌத்த பீடாதிபதிகளிடம் கூறினார். மேலும் அவர் மல்வத்தை விகாரையின் வண. ரம்புக்வெல விபசி மகாநாயக்க தேரரையும் சந்தித்துப் பேசினார்.

## இராணுவ உயர் மட்டத்தில் பல மாற்றங்கள்

[கொழும்பு]
சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடத்தில் மேலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இரண்டு இராணுவ ஜெனரல்கள் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதால் இம்மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

சிறிலங்கா இராணுவத்தின் 7 மேஜர்கள் லெப்டினன்ட் கேணல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர், நான்கு அதிகாரிகள் கேணல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதனை தொடர்ந்து வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள சிறிலங்கா தலைமையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கேணல் சரத் பொன்சேகா பொலநறுவை பிரிகேட் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் கொத்தலாவல இராணுவ பயிற்சிக் கல்லூரி பொறுப்பதிகாரியான கேணல் ஜெயக்கொடி அம்பாறை மாவட்டத் தளபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## சமாதானக்குழு அறிக்கை விரைவில் வெளியாகும்

(கொழும்பு)
அண்மையில் வடக்கு கிழக்கில் பயணம் செய்த சர்வதேச சமாதானக் குழுக்களின் அறிக்கைகள் தற்போது தயாரிக்கப்பட்டுவருகின்றன. இவை விரைவில் அரசிடமும் மற்றும் சர்வமத ஸ்தாபனங்களிடமும் சமர்ப்பிக்கப்படும்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாகும் வகையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என குழுக்களின் முக்கியஸ்தர் ஒருவர் கூறினார்.

## பரசூட் சாகசம் காட்டிய 2அதிரடிப்படையினர் காயம்

(கொழும்பு)
இரத்மலானை விமானநிலையத்தில் நடைபெற்ற கனேமுல்ல அதிரடிப்படை பிரிவின் பரா பயிற்சி கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் பரசூட் பாய்ச்சல் சாகசத்தில் இரண்டு அதிரடிப் படையினர் காயமடைந்தனர்.

1200அடி உயரத்திலிருந்து 28பயிற்சியாளர்கள் வை - 12 விமானத்திலிருந்து குதித்தனர். இவர்கள் 35அடி விட்டமுள்ள ரி- 10 எம். சி. ஐ -1ரக பரசூட் மூலம் தரையை வந்தடைந்தபோதே இவர்களில் இருவர் காயமடைந்தனர்.

அன்றைய தினம்வீசிய கடும் காற்றும் திடீர்மழையும் பரசூட்படையினரின் நிகழ்ச்சியை சோபிக்க செய்யவில்லை என கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

வவுனியாவில்

## விமானத்தள விஸ்தரிப்பு மக்களைவெளியேற உத்தரவு

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் விமானத் தளத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள இடங்களை விட்டு மக்களை வெளியேறும்படி சிறிலங்கா இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

வவுனியா விமானத்தளத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கோவில் புதுக்குளம், தச்சன்குளம் ஆகிய இடங்களில் உள்ள மக்களையே வெளியேறும்படி சிறிலங்கா இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் தீவிரம்

மட்டக்களப்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள்மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது. நகரின் நுழைவாயில்களில் உள்ள பொலிசாரின் சோதனைச் சாவடிகளுக்கு அருகே இருக்கும் குடும்பங்களின் அங்கத்தினர் விபரங்கள் மீண்டும் பொலிஸாரால் பதிவு செய்யப்படுகின்றன

குறிப்பாக கிராமப் பகுதிகளிலிருந்து நகருக்குள் பிரவேசிப்போர் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நகருக்குள் விற்பனைக்காக கொண்டு வரப்படும் மரக்கறி மூடைகள், கீரைச் சாக்குகள் என்பனவும்கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பில் ஜனாதிபதி இடம் பெயர் சேவை நடைபெற இருப்பதைமுன்னிட்டே பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

## இந்திய அமைச்சர் விஜயம்

(கொழும்பு)
இந்திய—இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார். இவரின் கொழும்பு விஜயத்தின்போது இரு நாடுகளினதும் வெளியுறவு அமைச்சர்கள் மட்ட சந்திப்பும் நடைபெறும்.

## கணிதபாடம் புத்தூக்க வகுப்பு

(பருத்தித்துறை)
கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் கணித பாடத்தில் கடந்த வருடம் க. பொ. த. (சா/த) தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கான புத்தூக்க கணிதபாடச் செயலமர்வு சனி, ஞாயிறு தினங்களில் அதிபர் திரு. க. பொன்னையா தலைமையில் நடைபெற்று வருகின்றது. ஆசிரியர் ச. மதியழகன் இப்புத்தூக்கச் செயலமர்வை நடாத்தி வருகின்றார். அக்கிராமத்தில் உள்ள, கணித பாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களும் பங்கு பற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## விதை உருளைக்கிழங்கு 100 மெ. தொன் வரும்

1993ஆம் ஆண்டுக்கான உருளைக்கிழங்கு செய்கைக்கு முன்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு விளைவிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு 100 மெ. தொன் இம்முறை இங்கு அனுப்பி வைக்கப்படுமென விவசாயத் திணைக்கள செயலாளர் யாழ் அரசாங்க அதிப

## கொழும்பு அகதி முகாம் மூடப்பட்டது

[கொழும்பு]
கொழும்பு விவேகானந்தா சபைக் கட்டடத்தில் கடந்த மூன்று வருடங்களாக தங்க வைக்கப்பட்டிருந்த 109 குடும்பங்களைச் சேர்ந்த 348 தமிழர்கள் மட்டக்களப்புக்கு அரச அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

விசேட பஸ்கள் மூலம் மட்டக்களப்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் தங்குவதற்காக 100 அடி நீளமும் 14 அடி அகலமும் கொண்ட கிடுகுக் கொட்டில்கள் மட்டக்களப்பு நாவலடிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இக் கிடுகுக் கொட்டில்களில் 41 குடும்பங்கள் மட்டுமே தங்கமுடியுமாம்.

இதேவேளை பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் இவர்களை அழைத்து வர வேண்டாம் என்றும் மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

## மன்னார் தாக்குதல் குறித்து இராணுவ அதிகாரி வியப்பு

(கொழும்பு)
சோதனை தடைமுகாம்கள் அதிகளவு உள்ள பிரதான பாதையூடாக எவ்வாறுபாலத்திற்கு வந்து இந்த தாக்குதலை புலிகள் நடத்தினார்கள் என மன்னார் தீவையும் பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் கருச்சட்டி பாலத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழீழ விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட ஜீப், அம்புலன்ஸ் மீதான அதிரடித்தாக்குதல் சம்பவம் இராணுவ வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவத்தின் போது ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட இருவர் பலியானாதாகவும் நான்குபேர்படுகாயமடைந்ததாகவும் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இறந்தவரான சப் இன்ஸ்பெக்டர் கரவெட்டி துன்னாலையை சேர்ந்த உதயகுமார் என்றும், மற்றவர் நிமால் ஜயவிக்கிரமசிங்க என்ற கான்ஸ்டபிள் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

## காட்டுக்குச் சென்றவர் வேட்டுக்கு இலக்காகி மரணம்

மட்டக்களப்பு பொலன்னறுவ எல்லையில் உள்ள காட்டுப்பகுதியில் வேட்டைக்குச் சென்ற மூவரில் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இன்னொருவரை துப்பாக்கியுடன் காணவில்லை என்று பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது நபர் தப்பி ஓடி விட்டார்.

இறந்தவர் அரலன்வில கிராமத்தைச் சேர்ந்த எச். எம். ரத்நாயக்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## அரசின் கொள்கையே தோல்விக்குக் காரணம்

– அசாஜி தேரோ

போர்க்கைதிகளை விடுவிக்கும் முயற்சி தோல்வியடைந்தமைக்கு அரசின் உறுதியற்ற போக்கும், கொள்கையுமே காரணம் என வண. அசாஜி தேரோ கருத்துத்தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட இவர்

திட்டங்கள் மூலமே விடுவிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இதுகுறித்து ஆராய பல சமயத் தலைவர் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று கடந்த புதன் நடை

கான முயற்சியில் ஈடுபட்டும் உள்ளனர். இதன் ஒரு கட்டமாகவே அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்தபோது யுத்தக் கைதிகளான இருபொலிசாரை விடுதலைசெய்தனர்

அதன் பிற்பாடு, போர்க்கைதிகளின் உண்ணாவிரதம் முடிவுற்றதும், சிறிலங்கா அரசாங்கம் தடை நீக்கப்பட்ட பொருள்களின் ஒரு சிறுதொகுதியைத் தானும் அனுப்பிவைக்கமுன்னரே ஐந்து பொலிசாரை விடுதலை செய்தனர். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அதனை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகக் கொண்டு, சமாதான சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமானமுயற்சியை எடுக்கவில்லை. மாறாக, நல்லெண்ணச் சூழ்நிலை ஒன்று உருவாவதற்கான உடன்பாட்டையே நிறைவேற்றாமல் கைவிட்டுவிட்டது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இப் பின்னடிப்பின் பின்னரும், நோயுற்றிருந்த போர்க்கைதி ஒருவரை விடுதலைப் புலிகள் மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்துள்ளனர். உடன்பாட்டில் இருந்து சிறிலங்கா அரசாங்கம் பின்வாங்கியதன் பின்னர் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கையானது, அவர்கள் இன்னமும் கைதிகள் விடுதலை தொடர்பாகவும், சமாதானச் சூழல் ஒன்றை ஏற்படுத்துவதற்கான நல்லெண்ண முயற்சிகளை இன்னமும் கைவிடவில்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது.

இருப்பினும், கொழும்பிலுள்ள அரசியல்வாதிகள் மற்றும் பத்திரிகைகளும் விடுதலைப் புலிகள் இயக்கம் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்வதன்மூலம் விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டவேண்டும், அது பேச்சுவார்த்தைக்கான முன்னோடி நடவடிக்கையாக அமையவேண்டும் எனக்கோருவதில் அர்த்தம் எதுவுமில்லை. ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாராக உள்ளதாக விடுதலைப் புலிகள் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னதாக பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், விடுதலைப் புலிகள் இதுவரை காட்டிய நல்லெண்ண, சமாதானத்திற்கான சமிக்ஞைகளைப் புறக்கணித்த / கண்டுகொள்ளாத அரசாங்கமே சமாதானத்திற்கான முன் முயற்சிகளை இனி மேற்கொள்ள வேண்டும். இன்று கூட, விடுதலைப் புலிகள், கைதிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டில் இருந்து மாற்றம் எதையும் அறிவிக்காத நிலையில், அரசாங்கம் தானாகவே முறித்துக் கொண்ட உடன்பாட்டிற்குப் புத்துயிர் கொடுப்பதன்மூலம், நல்லெண்ண, சமாதானசூழல் ஒன்றை உருவாக்க வாய்ப்பு ஏற்படலாம்.

இதனைவிடுத்து, தொடர்ந்தும் விடுதலைப் புலிகளே நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்என எதிர்பார்ப்பதுதவறாகும். ஏனெனில், நல்லெண்ணம், சமாதானம் என்றரீதியில் தொடர்ந்தும் விட்டுக் கொடுப்புக்களைச் செய்வது பலவீனமாகக் கருதப்படுமே ஒழிய, நல்லெண்ண முயற்சியாகக்கருதப்படமாட்டாது. ஆகையினால், சமாதான நல்லெண்ண முயற்சிகளை இனி வெளிக்காட்ட வேண்டியது சிறிலங்காவின் பொறுப்பு. முறிந்துபோய்விட்ட கைதிகள் விடுதலை விவகாரமே இதனை வெளிக்காட்டப் போதிய சந்தர்ப்பத்தைக் கொண்டுள்ளது.

---

முல்ல அதிரடிப்படை பிரிவின் பரா பயிற்சி கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் பரசூட் பாய்ச்சல் சாகசத்தில் இரண்டு அதிரடிப் படையினர் காயமடைந்தனர்.

1200அடி உயரத்திலிருந்து 28பயிற்சியாளர்கள் வை - 12 விமானத்திலிருந்து குதித்த பரசூட் மூலம் தரையை வந்தடைந்தபோதே இவர்களில் இருவர் காயமடைந்தனர்.

அன்றைய தினம் வீசிய கடும் காற்றும் திடீர்மழையும் பரசூட்படையினரின் நிகழ்ச்சியை சோபிக்க செய்யவில்லை என கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

வவுனியாவில்

## விமானத்தள விஸ்தரிப்பு மக்களைவெளியேற உத்தரவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் விமானத் தளத்திற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள இடங்களை விட்டு மக்களை வெளியேறும்படி சிறிலங்கா ராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

வவுனியா விமானத்தளத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கோவில் புதுக்குளம், தச்சன்குளம் ஆகிய இடங்களில் உள்ள மக்களையே வெளியேறும்படி சிறிலங்கா இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

---

ளில் அதிபர் திரு. க. பொன்னையா தலைமையில் நடைபெற்று வருகின்றது. ஆசிரியர் ச. மதியழகன் இப்புத்தாக்கச் செயலமர்வை நடாத்தி வருகின்றார். அக்கிராமத்தில் உள்ள, கணித பாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களும் பங்கு பற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## விதை உருளைக்கிழங்கு 100 மெ. தொன் வரும்

1993ஆம் ஆண்டுக்கான உருளைக்கிழங்கு செய்கைக்கு முன்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு விளைவிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு 100 மெ. தொன் இம்முறை இங்கு அனுப்பி வைக்கப்படுமென விவசாயத் திணைக்கள செயலாளர் யாழ் அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

---

தெரிவிக்கின்றது.

## காட்டுக்குச் சென்றவர் வேட்டுக்கு இலக்காகி மரணம்

மட்டக்களப்பு பொலன்னறுவ எல்லையில் உள்ள காட்டுப்பகுதியில் வேட்டைக்குச் சென்ற மூவரில் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். இன்னொருவரை துப்பாக்கியுடன் காணவில்லை என்று பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது நபர் தப்பி ஓடி விட்டார்.

இறந்தவர் அரலன்வில கிராமத்தைச் சேர்ந்த எச். எம். ரத்நாயக்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## அரசின் கொள்கையே தோல்விக்குக் காரணம்

— அசாஜி தேரோ

போர்க் கைதிகளை விடுவிக்கும் முயற்சி தோல்வியடைந்தமைக்கு அரசின் உறுதியற்ற போக்கும், கொள்கையுமே காரணம் என வண. அசாஜி தேரோ கருத்துத்தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட இவர்களை மதரீதியான வேலைத் திட்டங்கள் மூலமே விடுவிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இதுகுறித்து ஆராய பல சமயத் தலைவர் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று கடந்த புதன் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

---

### கரும்புலிகள்

உலோகத்திலேயும் நாம் இந்த வீரர்களைச்சந்திக்க முடியாது. இந்த நாடாவில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் முத்துக்கள் இந்த நாடாவில் குறைகள் இல்லை என்ற குறைமட்டும் தான் உள்ளது என்றார்.

வண. கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அவர்கள் மதிப்புரையாற்றும்போது,

கவிதையும் இசையும் இணைந்து இசை நாடாவாகும்போது, அது பலரைச் சென்றடைகின்றது. இதனால் கவிஞனுக்கும், கலைஞனுக்கும் உள்ள சமூகப் பொறுப்பு உயர்கின்றது.

இந்த ஒலிநாடா இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் எதிர்காலத்திற்கு பதிந்து வழங்கியுள்ளது. வரலாற்று ஆவணங்களைத் தாங்கி நிற்கின்றது என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் உரை நிகழ்த்தும் போதுஇங்கு ஒலிநாடா இலக்கியமாகவே காணப்படுகிறது. கலை எம்மை இன்னொரு உலகத்திற்கு கொண்டு செல்கிறது. இதன்பின்னால் நாம் நிஜ உலகத்தை விளங்கிக் கொள்கிறோம்.

இந்த ஒலி நாடாவைப் பார்க்கும்போது இது முனைப்பாக இருக்கும் என நம்புகிறேன்.

பாடல் என்னும்போது ஒன்று இலக்கியம், மற்றது பாடல். ஒலிகளைக் கண்களால் காண்கிற தன்மை ஒரு இசைக் கலைஞனுக்கு உண்டு.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் திறமையில் இப் பாடல்கள் சிறப்பாக உள்ளன. கேட்க மட்டுமல்ல; வாய்விட்டுப் பாடவும் இப்பாடல்கள் சிறப்பாக அமைந்துள்ளன என்றார்.

பண்டிதர் வீ. பரந்தாமன் பேசும்போது, கரும்புலிகளின் தற்கொடை, வீரம் போன்றவற்றை இப்பாடல் மூலம் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார். கவிஞர் தன் படைப்பால் கரும்புலிகளை அளந்து காட்டியுள்ளார் என்று குறிப்பிட்டார். (தி)

### றுகுணு

களை ஏற்றிய நிலையில் ஒரு சில தினங்கள் காத்திருப்பதா? என்பது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. எனினும் இக்கப்பல் குறித்து தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று நேற்று இரவு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை 'றுகுணு' கப்பல் நேற்று நள்ளிரவுவரை காங்கேசன்துறை துறைமுகத்திலேயே தரித்து நிற்பதாகத் தெரியவருகிறது. (க) (நி)

### இசை

நாடாவை வெளியிட்டு வைக்க அதை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். திரு. யோகரட்ணம் யோகி அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தார்.

இசையமைப்பாளர் கண்ணனுக்கு தலைவர் பிரபாகரன் வழங்கியதங்கப்பதக்கம்தமிழ்ச்செல்வனால் அணிவிக்கப்பட்டது. இயலிசைவாரிதி வீரமணிஐயர், யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை வண. கலாநிதி சந்திரகாந்தன் அடிகள், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பண்டிதர் வீ. பரந்தாமன் ஆகியோர் மதிப்பீட்டுரைகள் நிகழ்த்தினர். (தி)

### றுகுணு கப்பலில்

பெருங்கடலில் வைத்து கப்பலைப் புதனன்று கடத்திச் சென்றனர் என்றும்,

முழுப்பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டதாக ஒரு தரப்பும், மற்றும் என்ஜின் ஓயில், பிறேக்ஓயில், தீப்பெட்டிப் பொதிகள் ஆகியன மட்டும் கடற்கொள்ளை அடிக்கப்பட்டு புலிகளின் படகுகளில் ஏற்றிச்செல்லப்பட்டதாக கொழும்புக்கு மற்றுமொரு செய்தி எட்டியுள்ளதாகவும் டெய்லி நியூஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்துபாதுகாப்பைமீறிஎவ்வாறு புலிகள் றுகுணுக் கப்பலைக் கடத்திச்சென்றார்கள் என்பது பற்றி அதிகாரிகள் கருத்து எதுவும் வெளியிடவில்லை. ஆனால் நிராயுதபாணியான இக் கப்பலை புலிகள் துணிகரமாகக் கடத்திச்சென்றுள்ளனர் என்பதில் அதிகாரிகள் மத்தியில் கருத்து வேறுபாடு இல்லை. இவ்வாறு டெய்லி நியூஸ் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த புதன் கிழமை 'றுகுணு' கப்பல் நடத்திய நாடகம் தெரிந்ததே.

### ஆளும் கட்சியினர்

வில் அதிருப்தி கொண்டிருக்கும் ஆளும்கட்சி உறுப்பினர்களை எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்தித்துப் பேசிவருவதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிப்பதில் அரசாங்கம் தவறான அணுகுமுறையை கடைப்பிடித்துள்ளதாக குற்றம்சாட்டி எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றைக் கொண்டுவர முயற்சிப்பது தெரிந்ததே.

---

திருட்டு போன மோட்டார் சைக்கிள்

## இரண்டு வருடங்களின் பின் காவல்துறையால் மீட்பு

இத்தாவில் பளை பகுதியில் 2 வருடங்களுக்கு முன் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றை சாவகச்சேரி காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

மேற்படி மோட்டார் சைக்கிள் அதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு என்பவர் தனது வீட்டுக்கு அண்மையில் உள்ள தென்னந்தோட்ட கொட்டில் ஒன்றில் விட்டபோது இரண்டு வருடங்களுக்கு முன் களவாடப்பட்டதாக சாவகச்சேரி காவல்துறை பணிமனையில் முறைப்பாடு செய்திருந்தார். இவரின் முறைப்பாட்டின்படி புலன் விசாரணைகளை மேற்கொண்ட காவல்துறையினர் களவாடியவரை பிடித்துள்ளார்கள். மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது. (86)

### பூநகரி

ந்து தயாரித்த அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

மேற்படி அறிக்கை தற்போது விடுதலைப் புலிகளால் ஆராயப்பட்டு வருவதாகவும் இதன்பின் விடுதலைப் புலிகள் இதுதொடர்பாக ஓர் அறிக்கையை தயாரித்து ஐ. நா. பிரதிநிதிகளிடம் சமர்ப்பிப்பர் எனவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளால் அனுப்பப்படவுள்ள அறிக்கையில் உள்ள ஆட்சேபனைகளையும் ஆலோசனைகளையும் பற்றி ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் அரசுடன் கலந்தாலோசிக்கவுள்ளது.

பூநகரிப் பாதை தொடர்பாக விடுதலைப்புலிகள் - சிறிலங்கா அரசு - அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றிடையே ஓர் உடன்பாடு காணும்பட்சத்தில் கேரதீவு - பூநகரி இறங்கு துறையை திருத்த அதிககாலம் பிடிக்காது என ஐ. நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் யாழ்ப்பாணம் வந்திருந்த ஐ. நா. பிரதிநிதிகள் நேற்றுக்காலை அரசசார்பற்ற பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினர். 13 அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். குடாநாட்டில் அகதிமுகாம் பராமரிப்பதில் தமக்குள்ள சிக்கல் பற்றியும் அத்தியாவசியப்பொருள்களையும் இதர பொருள்களையும் தமது உதவித் திட்டங்களுக்கென பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்கள் பற்றியும் நேற்றையசந்திப்பில் ஆராயப்பட்டது.

. தரைவழிப் பாதைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஏற்படும் இடர்கள் பற்றியும் ஐ. நா. பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறப்பட்டது.

## புகைப்படக்கலை பயிற்சி நெறி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சிநெறி தொகுதி 6இன் ஆரம்பவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் 100 பேர் பயிற்சி பெறவுள்ளனர்.

புகைப்படக்கலை அடிப்படைப் பயிற்சியை இதுவரை 500 இற்கு மேற்பட்டோர் பயின்று வெளியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 02-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10187


வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-2829, 27-4630, 24-8364, 26-3821, 24-0521, 40-7704, 26-2941, 24-2288, 42-1293, 28-1730, 26-1253, 26-6527, 42-9112, 41-5979, 42-1750, 41-9038, 41-5015, 26-3528, 41-9480, 26-6029, 41-1531, 41-7563, 28-9327, 28-2511, 24-5529, 26-0560, 42-2862, 26-1495, 24-2944, 26-7612.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-6488, 22-7406, 28-5484, 27-5058, 42-3993, 27-7750, 24-4390, 24-5734, 22-3887, 40-2394, 26-3118, 28-1706, 26-2745, 42-2432, 26-8878, 41-9111.

## மிருதங்க அரங்கேற்றம்



சங்கீதரத்தினம் திரு எம் சிதம்பரநாதன் அவர்களிடம் மிருதங்க இசைபயின்ற எமது புதல்வன்

செல்வன்

**காங்கேயன் ஆதவன்**

அவர்களின்

**மிருதங்க அரங்கேற்றம்**

காலம்:- இன்று (03.07.1993) சனிக்கிழமை மாலை 4. 30 மணி.

இடம்:- இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம். (சட்டநாதர் வீதி, நல்லூர்.)

தலைவர்:- திரு. க. குணராஜா அவர்கள் (பிரதம செயலர் யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்:- பேராசிரியர் கா சிவத்தம்பி அவர்கள் (தலைவர் துண்கலைத் துறை-யாழ்- பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:- திரு து. வைத்திலிங்கம் அவர்கள் (மாவட்டப் பிரதி ஆணையாளர்)

---

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழு நிலா நாள் அறிவியல் அரங்கு

3.7.93 (இன்று) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும்.

3.00 – 4.00
"யூகோசிலாவியாவின் உடைவும் அது ஏற்படுத்தியுள்ள அரசியல் பிரச்சினைகளும்"
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்.

4.00 – 5.00
சிந்துவெளி நாகரிகம் – ஓர் இந்துப் பண்பாட்டு நோக்கு
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைவர்,
இந்து நாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்

(சி-6941)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் பவான்**
(சாந்தலிங்கம் நாகேந்திரராஜா)

தாயின் மடியில் 29-12-1967
தமிழீழத்தாயின் மடியில் 03-07-1990

காலங்களால்
வற்றாத கண்ணீர்த் தடாகம்

சாதனையின் வீரனாய்
சரித்திரம் படைத்தவன்
தமிழ்த்தாயின் மடிதனிலே மீளாத்துயில் கொள்கிறான்

நாமும் தினம் வெதும்புகின்றோம்
உன்னையெண்ணி கவலையினால்
உன் நிறை மகா குணங்கள் யாவும்
நெஞ்சமே நினைவுகோர
மூன்றாண்டு முடிவுற்றாலும் முடியாது
ராஜா உன் வரலாறு
வீரம் நிறை மாவீரா! உன் ஆத்மா சாந்தியடைய

### 'இந்துபோட்' ராஜரத்தினம் நினைவுதினம்

அமரர் இந்துபோட் ராஜரத்தினத்தின் 109 ஆவது பிறந்ததினம் நாளை ஞாயிறு காலை 9மணிக்குமுத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்படுகிறது.

பல்கலைப்புலவர் க. சி. குலரத்தினம் நினைவுரை நிகழ்த்துகிறார். பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம் சுவாமி சித்ரூபாநந்தா நிறைவாழ்வு இல்லச் சிறார்களுக்கு ஆடை வழங்குவார். இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றுவார்.

### மூளைக்காய்ச்சலுக்கு பலி

[தொல்புரம்]

மூளாய் மேற்கைச் சேர்ந்த நாலு பிள்ளைகளின் தந்தை ய ன மணியம் தெய்வேந்திரம் (வயது 40) என்பவர் மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு மரணமானார்

இவர் மேற்படி நோயினால் பாதிக்கப்பட்டுயாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகையில் அங்கு மரணமானார் எனத் தெரிய வருகிறது (41)

### ஈழத்தமிழர் வரலாறு பொது விரிவுரை

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் 'ஈழத்தமிழர் வரலாறு' எனும் பொதுத் தலைப்பில் பொது விரிவுரைத் தொடர் ஒன்று இம்மாத நடுப் பகுதியில் ஆரம்பமாகவுள்ளது பிரதி சனிக்கிழமை தோறும் இரு விரிவுரைகள் என்ற வகையில் காலை 9மணி முதல் 12மணி வரை கைலாசபதி கலையரங்கில் மேற்படி விரிவுரைத் தொடர் நடைபெறும்.

வரலாறு, தமிழியல், பண்பாட்டியல் துறைகளில் புலமை சான்றோரின் 20இற்கு மேற்பட்ட விரிவுரைகள் மேற்படி விரிவுரைத் தொடரில் இடம் பெறவுள்ளன. ஆர்வலர்கள் இம் மாதம் 1ஆம் திகதி முதல் புறநிலைப் படிப்புகள் அலகுடன் கடிதம் மூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர்.

### அரச ஊழியர்களின்

ஆண்டு ஜனவரியில் நிலுவையாக வழங்கப்படும். மாதாந்தம் 3000 ரூபாவிற்கு கூடுதலாக சம்பளம் பெறுவோரின் சம்பள அதிகரிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. இவர்கள் தமது இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்பை முன்னர்கூறப் பட்டதுபோல் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பெறுவர்.

பாதுகாப்பு மற்றும் புனர்

# உடுகம்பொலவுடன் அரசு பேரம்

(கொழும்பு)

பிரேமதாச அரசாங்கத்திற்கு உடுகம்பொல சுமத்தி வந்த எல்லாக் குற்றச்சாட்டுக் களையும் அவர் மீளப் பெறும் இடத்து அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் மீளப் பெறப்படும் என்று அரசாங்கம் கூறியிருப்பதாக நம்பப்படுகிறது.

குறிப்பாக வட மத்திய மாகாணப் பகுதியில் அரசியல் நோக்கம் கொண்ட பல கொலைகளை அரசின் சட்ட விரோத கொலைக்கும்பல் மேற்கொண்டதாக உடுகம்பொல முன்னர் கூறியிருந்தது தெரிந்ததே.

இதேவேளை பிரேமதாச உடுகம்பொல அமெரிக்கா செல்வதற்காக அனுமதி கோரி விண்ணப்பம் எதையும் செய்யவில்லை என்று அமெரிக்க தூதுவரகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல அமெரிக்கத் தூதுவரகத்தில் விசா பெறுவதற்காக விண்ணப்பம் செய்திருந்தார் என்று வெளியாகிய செய்திகள் ஆதாரமற்றவையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதுவரகத்தில் முன்பு பணியாற்றிய உடுகம்பொலவின் மனைவியுடன் இணைந்து கொள்வதற்காக அவர் அமெரிக்கா செல்வதற்கு முன்பு முனைந்தாரா எனக் கேட்கப்பட்டபோது சாதகமான பதிலை தூதுவரக அதிகாரி வெளியிட்டார்.

இதேவேளை உடுகம்பொலவின் குடும்பத்தினரை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க அரசாங்கம் முயற்சி எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

### இன்று திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ, சங்கம் இன்று சனிக்கிழமை முழு நேரமும் சகல கிளைகளும் திறந்து வியாபாரம் நடைபெறும் என அறிவிக்கிறது.

சுகாதார அதிகாரி அனுமதியின்றி

### மாடுவெட்டியவர் காவல் துறையால் கைது

(தென்மராட்சி)

சுகாதார அதிகாரியின் அனுமதியின்றி வீட்டில் வைத்து மாட்டினை வெட்டி இறைச்சியாக விற்றவர் சாவகச்சேரி காவல்துறையினரிடம் பிடிபட்டார்.

30ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வீடொன்றில் இச் சம்பவம் இடம் பெற்றது. ஒரு மாட்டினை அனுமதியின்றி களவாக வெட்டியபோது சாவகச்சேரி காவல் துறையினர் கையும் மெய்யுமாக பிடித்துள்ளனர். பிடிபட்டவர் மீது விசாரணைகள் நடைபெறுகின்றன. (86)

## 90-ம் நாள் நினைவலைகள் 03-07-1993



பிறப்பு
09-02-1969

வீரச்சாவு
04-04-1993

**லெப். பெருந்தேவன்** மோகன்
[சேனாதிராஜா குகதாஸ் குகா]

செல்வன்

## காங்கேயன் ஆதவன்

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்

காலம்:- இன்று (03.07.1993) சனிக்கிழமை
மாலை 4. 30 மணி.

இடம்:- இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்.
(சட்டநாதர் வீதி, நல்லூர்.)

தலைவர்:- திரு. க. குணராஜா அவர்கள்
(பிரதம செயலர் யாழ்ப்பாணம்)

பிரதம விருந்தினர்:- பேராசிரியர் கா சிவத்தம்பி அவர்கள் (தலைவர் நுண்கலைத் துறை-யாழ்- பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்:- திரு து. வைத்திலிங்கம் அவர்கள் (மாவட்டப் பிரதி ஆணையாளர்)

## இசை அரங்கில்

செல்வன் ஆதவனுடன் சங்கீத பூஷணம்எஸ்.பத்மலிங்கம் (பாட்டு.) இசைஞான திலகம் திரு. உ. இராதாகிருஷ்ணன் (வயலின்),கலாவித்தகர் செல்வன் க.கண்ணதாசன் (கடம்) வித்துவான் திரு. என். சண்முகலிங்கம் (தம்பூரா)ஆகியோர் இணைகிறார்கள்.

அன்புடன் அழைக்கின்றோம்,

திரு. இ. காங்கேயன்
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்.
திருமதி ச. காங்கேயன்
யாழ்/மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர்

36/10 மணற்தரை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். [5262]

---

## மீண்டும் ஞாபகமூட்டுகின்றோம்!!!

## இன்று ஆரம்பமாகும் வகுப்புக்கள்

காலை 8. 00 மணி
ஆண்டு 9, 10, O/L பகல் நேர வகுப்பு
O/L மீட்டலும் வினாவிடையும்

காலை 10 00 மணி
**A/L 94,95விஞ்ஞான பிரிவு**

மதியம் 1. 30 மணி
**A/L 94, 95 கலை வர்த்தகப் பிரிவு**

## "நவைகடன்ஸ்"

அருச்சுனாவீதி, ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/6943)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---



## மேஜர் பவான்

(சாந்தலிங்கம் நாகேந்திரராஜா)

தாயின் மடியில் 29-12-1967
தமிழீழத்தாயின் மடியில் 03-07-1990

காலங்களால்
வற்றாத கண்ணீர்த் தடாகம்

சாதனையின் வீரனாய்
சரித்திரம் படைத்தவன்
தமிழ்த்தாயின் மடிதனிலே மீளாத்துயில் கொள்கிறான்

நாமும் தினம் வெதும்புகின்றோம்
உன்னையெண்ணி கவலையினால்
உன் நிறை மகா குணங்கள் யாவும்
நெஞ்சமே நினைவுகோர
மூன்றாண்டு முடிவுற்றாலும் முடியாது
ராஜா உன் வரலாறு
வீரம் நிறை மாவீரா! உன் ஆத்மா சாந்தியடைய
அரவணைப் போமுன் பாதமதை

03-07-93 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், சகபோராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்படி லேன்,
கொக்குவில். (5265)

அம்மா, சகோதரர்கள்.

---

விரிவுரைத் தொடரில் இடம் பெறவுள்ளன. ஆர்வலர்கள் இம் மாதம் 1ஆம் திகதி முதல் புறநிலைப் படிப்புகள் அலகுடன் கடிதம் மூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர்.

---


### அரச ஊழியர்களின்

ஆண்டு ஜனவரியில் நிலுவையாக வழங்கப்படும். மாதாந்தம் 3000 ரூபாவிற்கு கூடுதலாக சம்பளம் பெறுவோரின் சம்பள அதிகரிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. இவர்கள் தமது இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்பை முன்னர்கூறப் பட்டதுபோல் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பெறுவர்.

பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு, புனர் நிர்மாண பணிகளுக்கு போதுமான நிதியை ஒதுக்க வேண்டி இருப்பதால் கிடைக்கும் நிதியில் பெரும் பகுதியை அவற்றுக்கு ஒதுக்க வேண்டியிருப்பதாக அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

# நினைவில் நிலைத்த 2-வது ஆண்டு



வரதன்!

நீ

அமைதியானவன்;

இனிமையானவன்.

உன் சாவு.

அர்த்தமுள்ளது;

பெறுமதியானது.

எங்கள் தேசம் விடிவுகாண

எதிரி மண்ணில் எழுந்தபுயலே!

உறங்கு-

தமிழீழம் சிரிக்கக்

காவியம் பிறக்கும்.

## நடராஜா வரதராஜா (கரவெட்டி)

## வரதன்

**22-12-1959ல் இருந்து 3-7-1991 வரை**

(சி/6948)

குடும்பத்தினர், நண்பர்கள்

---

03-07-1993



பிறப்பு
09-02-1969

வீரச்சாவு
04-04-1993

## லெப். பெருந்தேவன்-மோகன்

[சேனாதிராஜா குகதாஸ் குகா]

சிரித்த முகம் இன்னும்தான் மறக்கவில்லையே
சாவி பிடித்த கையால் துப்பாக்கி ஏந்தினாயே
விடுதலைப்புலியாகி வேகமுடன் போராடினாயே
களம் பல கண்ட வேங்கை மறவனானாயே
எதிரியுடன் கட்டுவனில் நேரில் மோதினாயே
உன் வறுமையை விட மண்ணை நேசித்தாயே
தமிழ் ஈழம்தான் உன் இலட்சியம் என்றாயே
உன்னை என்றும்தான் மறப்போமா?

பாக்கியம் களஞ்சியம்
ஆலடிச்சந்தி, கோவில்வீதி,
நல்லூர் வடக்கு.
(5193)

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
உறவினர், நண்பர்கள்,
சகபோராளிகள்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி



உதிர்வு
14.7.92

ஆட்டத் திவஷம்
3.7.93

திருமதி

## இராசேஸ்வரி வேதாரணியம்

எமது இல்ல விளக்கே ஈடில்லா கற்பகமே, ஒப்பற்ற மாதாவே! அம்மா, எங்கள் கண்கண்ட தெய்வமே உன்னைப்போல் ஒரு குடும்பத் தலைவியை காண்பது அரிதிலும் அரிது. உனைநாடி எவர் வந்திடினும், மனங்கோணாது உதவிடும் உத்தமியே. உனை இழந்து தவித்திடும் கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உற்றார் உனக்கு முத்திப்பேறு கிடைத்திட தினமும் வணங்குகிறோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(5264)

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.